වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

Annual Performance Report

2022



දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - මහනුවර

மாவட்ட செயலகம் - கண்டி

District Secretariat – Kandy



மாவட்ட நிர்வாகத்தின் அதி உயர் நிர்வாக மத்திய நிலையம் மாவட்டச் செயலகமாகும். இலங்கையின் 25 மாவட்டச் செயலகங்களுக்குள் கண்டி மாவட்டச் செயலகத்துக்கு அதி விசேட ஸ்தானமொன்று உள்ளது. புனித தந்தம் பேணப்பட்டுள்ள மத்திய மலை நாட்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் உலக மரபுரிமை வாய்ந்ததுமான நகரமாக தேசிய மற்றும் சர்வதேச மக்களின் கௌரவத்துக்கு அது பாத்திரமாகி இருப்பதோடு அதன் கலாசார உரிமை, பெருமைமிகு வரலாறு மற்றும் இயற்கைச்சூழல் என்பன அதன் மகத்துவத்தை மேலும் உயர்த்துகின்றன.


கண்டி மாவட்டம் 1940 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 1,499,168 பேரை சனத்தொகையாகக் கொண்டிருக்கிறது. மாவட்டச் செயலகத்துடன் 20 பிரதேச செயலகங்களையும் 1188 கிராம அலுவலர் பிரிவுகளையும் 2588 கிராமங்களையும் கொண்டுள்ளது .

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், கோவிட் -19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின் சூழ்நிலை காரணமாக சாதாரண மக்களின் வாழ்க்கையில் சமநிலை சீர்குலைந்ததால், உடல் மற்றும் உள நிலையை சமநிலைப்படுத்த வழிமுறைகள் மற்றும் உத்திகள் தொடங்கப்பட்டன. அந்த உத்திகளை அமுல்படுத்துவதில் மக்களுடன் நெருங்கிய நட்புறவான பொதுச்சேவையை பேணுவதை நோக்கமாகக் கொண்டு எமது மனித வளத்தை மேம்படுத்தி வாடிக்கையாளர் சேவைக்கு ஏற்ற நிறுவன சூழலை உருவாக்கியதுடன் அனைவரதும் வாழ்க்கை நிலையை ஓரளவேனும் மீட்டெடுக்க முடிந்திருப்பது நாம் அடைந்த வெற்றியாகும்.

மேலும், கண்டி மாவட்ட நிர்வாகம் முதல் கிராமிய மட்டம் வரையிலான முழுப் பொறிமுறையையும் பிரதிபலிக்கும் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்திறன் மற்றும் கணக்கியல் அறிக்கையை இவ்வாறு வெளியிடுவதற்கு தங்களை அர்ப்பணித்துள்ள 20 பிரதேச செயலகங்களின் அதிகாரிகளுக்கும் மாவட்ட செயலக அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தன தென்னகோன்
மாவட்ட செயலாளர் / அரச அதிபர், கண்டி
உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர்

நிர்வாக வரைபடம் - கண்டி மாவட்டம







அடிப்படைத் தரவுகள்



மாகாணம்		மத்திய
மாவட்டம்		கண்டி
சதுர அளவு (ச.கி.மீ)		1,940
பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை		20
கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை		1,188
கிராமங்களின் எண்ணிக்கை		2,588
தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை		13
மாநகர சபைகளின் எண்ணிக்கை		01
நகர சபைகளின் எண்ணிக்கை		04
பிரதேச சபைகளின் எண்ணிக்கை		17
கல்வி வலயகங்களின் எண்ணிக்கை		06
பாடசாலைகளின் எண்ணிக்கை		651
ஆசிரியர்களின் எண்ணிக்கை		17,782
மாணவர் எண்ணிக்கை		274,557
வைத்தியசாலைகளின் (உயர்/கற்பித்தல்/மாவட்ட/கிராமப்புற) எண்ணிக்கை		81
ஆயுர்வேத வைத்தியசாலை நிலையங்களின் எண்ணிக்கை		16
வாக்காளர் எண்ணிக்கை (2022 வாக்காளர் பதிவேட்டின்படி)		1,168,697
பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை		12
மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை (கண்டி மாவட்டம்)		58
உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை		01
மொத்த சனத்தொகை (2022 ஆண்டிற்கமைய)		1,499,168
பெண்	(2022)	775,951
ஆண்		707,154
குடும்பங்களின் எண்ணிக்கை		348,019
வீட்டு அலகுகளின் எண்ணிக்கை		342,911

ஆதாரம்: தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் - மாவட்ட செயலகம் , கண்டி
தேர்தல் அலுவலகம் - கண்டி மாவட்டம், மருத்துவ தரவு பிரிவு

உள்ளடக்கம்

தொடர் எண்				விளக்கம்	பக்க எண்
1				**அறிமுகம்**	1
	1	2		நோக்கு , பெறுமானங்கள், செயற்பணி	8
	1	2	1	தரக் கொள்கை	9
	1	3		மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் பிரதான அலுவல்கள்	10
	1	4		ஒழுங்கமைப்பு அட்டவணை	12
	1	5	1	மாவட்ட செயலகத்தின் முக்கிய பிரிவுகள்	13
	1	5	2	பிரதேச செயலகங்கள்	14
2				**முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு**	
	2	1		விசேட நிகழ்வுகள்	15
	2	2		வெற்றிகள் , சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்	20
3				**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**	
	3	1		நிதிச் செயலாற்றுகைக் கூற்று	25
	3	2		நிதி நிலை அறிக்கை	26
	3	3		காசுப் பாய்ச்சல் கூற்று	27
	3	4		நிதி அறிக்கை குறிப்புகள்	28
	3	5		வருமான திரட்டு வினைத்திறன்	52
	3	6		ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் பயன்பாட்டு வினைத்திறன்	52
	3	7		நி.பி 208 ன் படி, கிடைத்த நிதி ஒதுக்கீடுகள்	53
	3	8		நிதி அல்லாத சொத்து அறிக்கை செயல்திறன்	63
	3	9		கணக்காய்வாளரின் அறிக்கை	66

4				செயல்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் படி	
	4	1	1	திட்டமிடல் பிரிவு	67
	4	1	2	பொறியியல் பிரிவு	67
	4	1	3	கணக்குப் பிரிவு	68
	4	1	4	உள்ளக கணக்காய்வாளர் பிரிவு	69
	4	1	5	அபிவிருத்தி பிரிவு	70
	4	1	6	காணிப் பிரிவு	71
	4	1	7	தொகை மதிப்பு புள்ளியியல் துறை	72
	4	1	8	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு	73
	4	1	9	மாவட்ட நில பயன்பாட்டு பிரிவு	74
	4	1	10	மத அலுவல்கள் பிரிவு (பௌத்த சமய அலுவல்கள்)	74
	4	1	11	மத அலுவல்கள் பிரிவு (இந்து சமய அலுவல்கள்)	75
	4	1	12	மத அலுவல்கள் பிரிவு (கிறிஸ்தவ சமய அலுவல்கள்)	75
	4	1	13	மத அலுவல்கள் பிரிவு (முஸ்லீம் சமய அலுவல்கள்)	76
	4	1	14	கலாசாரப் பிரிவு	77
	4	1	15	தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் அரச கரும மொழிகள் பிரிவு.	78
	4	1	16	சிறு கைத்தொழில் அபிவிருத்தி பிரிவு	79
	4	1	17	அளவீடு மற்றும் தரநிலை சேவைகள் பிரிவு.	79
	4	1	18	பாவணையாளர் சேவை பிரிவு	80
	4	1	19	மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவு (இலங்கை மகளிர் பணியகம்)	80

	4	1	20	மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவு (முன்பிராய அபிவிருத்தி)	81
	4	1	21	மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவு (தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையம்)	82
	4	1	22	மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவு (சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்)	83
	4	1	23	மனித வள அபிவிருத்திப் பிரிவு	84
	4	1	24	வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பிரிவு	85
	4	1	25	நிருவாகப் பிரிவு	85
	4	1	26	விளைதிறன் பிரிவு	89
	4	1	27	மாவட்ட ஊடகப் பிரிவு	90
	4	1	28	சமூர்த்தி பிரிவு	91
	4	1	29	நீர் வள அபிவிருத்தி பிரிவு	97
	4	1	30	மாவட்ட விவசாய பிரிவு	98
	4	1	31	சமூக பாதுகாப்பு பிரிவு	98
	4	1	32	சமூக சேவைகள் பிரிவு	99
	4	1	33	சமூக சேவைகள் (முதியோர்)	101
	4	1	34	சமூக சேவைகள் (ஆலோசனைகள்)	102
	4	1	35	கைத்தொழில் அபிவிருத்தி பிரிவு	103
	4	1	36	விளையாட்டு பிரிவு	104
	4	1	37	அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரிவு /நுண் நிதி	105
	4	1	38	மோட்டார் வாகன பிரிவு	105
	4	1	39	அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை	106
	4	1	40	மாவட்ட சமரச அலுவலர்	106

	4	1	41	விஞ்ஞான தொழில்நுட்பப் பிரிவு	107
	4	1	42	தேசிய உர செயலகம்	107
5				**நிலைபேரான அபிவிருத்திகளின் இலக்குகளை அடைதல்**	
	5	1		அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய நிலைபேரான வளர்ச்சி இலக்குகள்	108
	5	2		நிலைபேரான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான வெற்றிகள் மற்றும் சவால்கள்	108
6				**மனித வள விவரக்குறிப்பு**	
	6	1		ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்.	116
	6	2		மனித வளம் குறித்து நிறுவன செயல்திறன்	116
	6	3		மனித வள மேம்பாடு	117
7				**இணக்க அறிக்கை**	120

1. அத்தியாயம்

அறிமுகம்

1.1 கண்டி மாவட்டத்தின் அறிமுகம்

மனோகரமான மலைத்தொடர்கள் மற்றும் ஆற்று பள்ளதாக்குகளினால் உருவெடுத்த கண்டி மாகாணம் மத்திய மலை பிரதேசத்தின் 1,940 சதுர கிலோ மீற்றர் உடைய பூமி பிரதேசத்தில் பரவியுள்ள மனோரம்யமான நிலப்பகுதியாகும். வடக்கில் மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல, இரத்தோட்டை லக்கல, பல்லேகம மற்றும் வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவுகளாலும், கிழக்கில் பதுளை மாவட்டத்தின் மஹியங்கன பிரதேச செயலக பிரிவாலும், தெற்கில் நுவரெலியா மாவட்டத்தின் வலபனே, ஹங்குரன்கெத்த, கொத்மலை, நுவரெலியா மற்றும் அம்பகமுவ கோரளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளாலும் மேற்கில் கேகாலை மாவட்டத்தின் அரனாயக்க, புலத்கொஹூப்பிட்டி, மாவனல்லை மற்றும் இறம்புக்கனை பிரதேச செயலகங்களாலும் குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகம மற்றும் ரிதீகம பிரதேச செயலகப் பிரிவுகளை எல்லைகளாகக் கொண்ட கண்டி மாவட்டம், வடக்கு அட்சாம்சம் 60.56ம் 70.29 மற்றும் கிழக்கு தீர்க்க ரேகை 80.25ம் 80.00 ம் இடையே அமைந்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களைத் தழுவியோடும் மகாவலி கங்கை , மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து பாயும் நீரோடைகளால் நிரம்பி வழிகிறது. இது தவிர, தெதுரு ஓயாவின் ஆரம்ப நீரோடைகளும் பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவிலிருந்து ஊற்றேடுக்கின்றன. கண்டி மாவட்டத்தின் யட்டிநுவர மற்றும் உடுநுவர பிரதேச செயலக பிரிவுகளின் மேற்கு சரிவிலிருந்து பாயும் நீரோடைகள் மாஓயாவுடன் இணைந்து அதன் கொள்ளளவை அதிகரிக்கின்றன.

வரலாற்று பின்னணி

அபிமானமுடைய சரித்திரத்திற்கு உரிமைகோரும் கண்டி, அநுராதபுரம், பொலொன்னறுவை யுகங்களின் போது மலை நாட்டு பகுதிக்குரியதாக இருந்ததுடன், கம்பளையை ஆட்சி செய்த மூன்றாம் விக்ரமபாகு அரச காலத்தில் ஓர் நகரமாக முன்னேற்றப்பட்டுள்ளதாக பாரம்பரியக் கதைகளில் கூறப்பட்டுள்ளது. செங்கடகல நுவர (நகர்) எனும் பெயரால் அன்று குறிப்பிட்ட கண்டி, முதலாம் விமலதர்மசூரிய அரசனால் சிங்கள இராஜதானியின் தலை நகராக பயன்படுத்திக் கொண்டு அழகான தலதா மாளிகை ஒன்றையும், அரச மாளிகை உட்பட அனைத்து அங்கங்களினால் பூரணமடைந்த, ஓர் முழுமை அடைந்த நகரமாக உருவாக்கப்பட்டது. அன்று முதல் மூன்று நூற்றாண்டு காலத்திற்கும் அதிகமான காலம் போத்துகீசியர் , ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்கள் ஆகிய மேற்கத்திய பலம் வாய்ந்த இனத்தவர்களிடமிருந்து மாசற்ற பௌத்த சமயம் மற்றும் சிங்கள கலாச்சாரத்தினை பாதுகாத்து கொண்டு 1815 மார்ச் 02 ம் திகதி வரை சிங்கள அரச ஆட்சியின் தலை நகராக செங்கடகல நகர் அசையாதிருந்தது. கடல்துரை (மாகாணங்கள்) பிரதேசங்கள் மேற்கத்திய இனத்தவர்கள் ஆட்சி செய்த காலத்தில் ஏற்படுத்திய ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக நிகழ்ந்த வெற்றிகரமான யுத்தங்கள் பல, கண்டியை மையமாக வைத்து நடந்தன. இரண்டாம் இராஜசிங்க அரசர் ஆட்சியின் போது, பேராதெனிய, கன்னோருவ மற்றும் யட்டிநுவர தந்துரை ஆகிய இடங்களில் இடம்பெற்ற யுத்தங்களின் போது ஆக்கிரமிப்பாளர்களான அந்நிய நாட்டைய படைகள் முழுமையாகவே அழிந்தன. அந்நியவர்களிடமிருந்து சிங்கள இராஜதானியை காப்பதற்கு உருவாக்கிய முக்கிய கோட்டையான பலனகோட்டை தற்போதைய கடுகன்னாவ நகர் அருகில் அமைந்துள்ளது.

1815 பல அரசியல் பிரச்சினைகள் காரணமாக கண்டி இராட்சியம் பிரித்தானியர்களுக்கு உரித்தான பின்பு கடைசி சிங்கள அரசரான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க அரசன் அவ்வாண்டில் பெப்ரவரி 15ம் திகதி மெதமஹநுவர போமுரே கிராமத்தில் வைத்து ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டார். 1815 மார்ச் மாதம் 02 ம் திகதி கண்டி மகுல் மடுவையில் வைத்து கையொப்பமிட்ட "உடரட்ட கிவிசும்" (மலைநாட்டு ஒப்பந்தம்) மூலம் இலங்கையின் நிர்வாகம் ஆங்கிலேயர்ளுக்கு கைமாரியதுடன் அவர்களால் நாட்டின் தலைநகரமாக கொழும்பை உபயோகிக்கும் வரை நாட்டின் பிரதான நகரமாக கண்டி நகரமே கருதப்பட்டது.

சிங்கள வரலாற்றின் கடைசி சுதந்திர யுத்தமான 1818 இன் ஊவா - வெள்ளஸ்ஸ கலகத்திற்கு கண்டி பிரதேசத்தின் உயர்குலத்தை சேர்ந்த தலைவர்கள் பலர் தலைமை வகித்துள்ளனர். தனது பதவிகளை அகற்றி விட்டு சுதந்திர போருக்காக தன்னை அர்ப்பணித்து கொண்ட மொணரவில கெப்படிபொல, மடுகல்ல ஆகிய தலைவர்கள் பலருடைய பிறப்பிடமாக இருந்தது கண்டியேயாகும். 1818 சுதந்திர போரை குரூரமாக அடக்கிய ஆங்கிலேயர்களினால் கண்டி பிரதேசம் உட்பட்ட மலையகமானது தோட்டத்தொழில் மற்றும் வியாபாரத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதார அமைப்பை நோக்கி எடுத்து செல்லப்பட்டது.

தோட்ட பொருளாதாரத்தின் கீழ் முதன் முதலாக அறிமுகப்படுத்திய கோப்பி பயிற்செய்கை பங்கஸ் நோயினால் அழிந்த பின் இலங்கையில் நாட்டிய முதல் தேயிலை மரம் தெல்தொட்டை பிரதேச செயலகப் பிரிவின் லூங்கந்துரை தோட்டத்தில் இன்றும் காணலாம்.

சரித்திர பிரசித்தி பெற்ற இடங்கள்

அகில உலக பௌத்த மக்களால் போற்றப்படுகின்ற பெருமளவிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விகாரைகள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளன.

1. புனித தந்த (தலதா) மாளிகை
2. கடலாதெனிய விஹாரை
3. அம்பெக்க தேவாலயம்
4. தெகல்தொருவ இரஜமஹா விஹாரை
5. கல்மடுவ இரஜமஹா விஹாரை
6. தலாவை இரஜமஹா விஹாரை

காலநிலை மற்றும் சுற்றாடல் பண்புகள்

மத்திய மலையகம் பிரதானமாக கடல் மட்டத்தல் இருந்து 100-1600 மீற்றர் இடையிலான உயரத்தை கொண்டதாக அமைந்துள்ளது. ஆயினும் கண்டி மாவட்டத்தின் கிழக்கு பிரதேசம், மகாவலி கங்கையை எல்லையாக் கொண்டு கடல் மட்டத்தில் இருந்து 100 மீற்றர் அளவிலான சமவெளி நிலையை கொண்டுள்ளது. பொதுவாக மாதாந்த மழை வீழ்ச்சி 212 மி.மீ. அளவினை கொள்வதுடன், மாவட்டத்தின் கிழக்கு மற்றும் தாழ்ந்த (நில) பிரதேசமான மினிப்பே பிரதேச செயலக பிரிவானது வறட்சி வலைய காலநிலை பண்புகளை கொண்டுள்ளது.

மாவட்டத்தின் மாதாந்த மழைவீழ்ச்சி 2019 - 2020

மாதம்	மழை வீழ்ச்சி2019 (மில்லி மீற்றர்)	மழை வீழ்ச்சி20 20 (மில்லி மீற்றர்)
ஜனவரி	3.60	23.0
பெப்ரவரி	55.10	3.8
மார்ச்	20.00	56.9
ஏப்ரல்	222.90	107.2
மே	17.90	316.6
ஜூன்	82.00	129.5
ஜூலை	96.80	115.5
ஆகஸ்ட்	165.80	142.2
செப்டம்பர்	101.10	219.1
அக்டோபர்	288.20	59.5
நவம்பர்	197.40	160.9
டிசம்பர்	106.10	189.3

மூலாதாரம் - வளிமண்டலவியல் திணைக்களம்

பொதுவாக வெப்பநிலை செல்சியஸ் 20-22 பாகைக்கிடையிலான அளவில் இருப்பதுடன், ஆண்டு முழுவதும், மென்மையான காலநிலை மாவட்டத்தில் அதிகமான நிலப் பிரதேசங்களில் நிலவுகிறது. பொதுவாக தெல்தொட்டை, பஸ்பாகே கோரளை, கங்க இஹலகோரளை, உடதும்பர, பன்வில ஆகியப் பகுதிகளின் வெப்பநிலை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவை கொள்வதுடன் முக்கியமாக வறட்சி வலயத்தில் அமைந்திருக்கும் மினிப்பே பிரதேசத்தின் வெப்பநிலை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடையில் பொதுவாக அதிகமானதாகும்.

மாவட்டத்தின் மாதாந்த உச்ச மற்றும் ஆகக் குறைந்த வெப்ப நிலை 2019–2020

தொ. இ.	மாதம்	வெப்பநிலை 2019 (செல்சியஸ் மட்டம்)		வெப்பநிலை 2020 (செல்சியஸ் மட்டம்)	
		உச்ச	குறைந்த	உச்ச	குறைந்த
1	ஜனவரி	29.8	NA	30.7	19.8
2	பெப்ரவரி	31.0	20.6	31.4	20.3
3	மார்ச்	33.2	21.5	33.6	Na
4	ஏப்ரல்	32.4	21.5	33.1	21.7
5	மே	31.7	22.2	30.7	22.8
6	ஜூன்	29.9	21.3	29.5	21.8
7	ஜூலை	28.5	21.7	29.4	21.7
8	ஆகஸ்ட்	29.1	NA	29.2	21.3
9	செப்டம்பர்	29.1	NA	28.0	21.6
10	அக்டோபர்	29.0	21.1	29.2	21.3
11	நவம்பர்	30.0	21.1	30.1	21.4
12	டிசம்பர்	28.5	20.7	28.5	20.3

மூலாதாரம் - வளிமண்டலவியல் திணைக்களம்

மகாவலி கங்கை, மாவட்டத்தின் ஊடாக வடிந்தோடும் பிரதான நதியாவதுடன், அது முழு தூரத்தில் 110 கி.மீ. க்கு கிட்டிய அளவில் கண்டி மாவட்டத்தினூடாக வடிந்தோடுகிறது. மகாவலி கங்கையின் ஆரம்ப நீர் ஓடைகளான, ஹட்டன் ஆறு மற்றும் கொத்மலை ஆறு ஒன்று சேர்ந்து மகாவலி கங்கை எனும் பெயரில் பஸ்பாகே கோரளையின் பொல்வத்துர கிராமத்திலிருந்து பாயத் தொடங்குகிறது. அதே போன்று மகாவலி வலையத்தின் பிரதான மலை சிகரமான கொபோநீல கல (உயரம் 1,553.87 மீற்றர்) தோதொழுகல (உயரம் 1,642.57 மீற்றர்) ஆகிய மலைத்தொடர்கள் கண்டி மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. பொதுவாக உயர்ந்த அளவிலான மழைவீழ்ச்சியைக் கொண்ட இவ்வலையம் மகாவலி கங்கை மற்றும் அம்பன் கங்கையின் பிரதான நீர் வளமுள்ள பிரதேசமாகும்.

இலங்கைக்கே உரித்தான தாவரங்கள் மற்றும் வன விலங்குகளுக்கு பாதுகாப்பை பெற்றுகொடுக்கும் நகல்ஸ் மலைத்தொடர் மாவட்டத்தின் இயற்கை அழகில் தலை சிறந்த இடமாகும்.

ஹந்தான மலைத்தொடர், அம்புளுவாவ மலை, பலன மலைத்தொடர், அலகல்ல மலை போன்ற மலை பிரதேசங்கள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளதுடன், கடியன்லென, கலபொட ஆகிய அழகான பெருமளவிலான நீர் வீழ்ச்சிகள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந் நீர்வீழ்ச்சிகளில் பெருமளவு பிரசித்தியற்ற நிலையில் இருப்பினும் அவை அழகில் மிக உயர் நிலையுடையதாகும்.

இயற்கை தாவரங்கள்

கண்டி மாவட்டத்தின் முழு நில அளவு 194,000 ஹெக்டயார் ஆகும். மாவட்டத்தின் முழு பூமி அளவில் 21% வீதம் அதாவது 41,521 ஹெக்டயார் காடுகளாக உள்ளன. கடுமையாக பாதுகாக்கப்படும் பிரதேசங்களாக காக்கவேண்டிய இக்காடுகளில் 23,317ஹெக்டயார் நில அளவு மிகவும் அடர்த்தியான காடுகளாவும், ஹெக்டயார் 10759 திறந்த காடுகளாளவும், ஹெக்டயார் 7,445 அளவு காடு பயிருதலாகவும் உள்ளது. உயர் மலை உச்சிகளை ஒற்றியதாக அதிக அடர்ந்த காடுகள் காணப்படுகிறது. இதனால் பிரதேசத்தின் நீர் ஊற்றுகள் நீடித்திருப்பதற்கு இவ்வனாந்தர நில பரப்பினை பாதுகாத்துக்கொள்ளல் மிக அவசியமாக உள்ளதுடன், பல்வேறு மனித செயற்பாடுகளினால் இதன் நீடித்திருத்தலுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும் சந்தர்பங்கள் உள்ளன.

நகல்ஸ் பாதுகாக்க வேண்டிய பகுதிக்குரிய பிரதேசத்தின் பெருமளவான நிலப்பரப்பு கண்டி மாவட்டத்திற்குரியது. இலங்கைக்கே உரித்தான தாவரம் மற்றும் வனவிலங்குகள் பலவற்றின் வசிப்பிடமாகிய இவ்வலயம், கடும் இயற்கை பாதுகாப்பு பகுதியாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஹன்தான மலைத்தொடர், வாக்கரவத்த காடு மற்றும் உடவத்த காடு ஆகியவை கண்டி நகர் அருகில் அமைந்துள்ளதுடன் ஹன்தான மலைத்தொடர் கடும் சுற்றாடல் அச்சுறுத்தல்களுக்குட்பட்ட பிரதேசமாகும்.

வனவிலங்குகள்

கண்டி மாவட்ட காடுகளை ஒத்தி பெரும் வனவிலங்கு கூட்டமொன்று வாழ்வதுடன் யானை, சிறுத்தை, குரங்குகள், காட்டுப்பன்றி, மான், அட்டை மான் ஆகியவை முக்கிய இடங்களை வகிக்கிறது.

உடதும்பர, மினிப்பே ஆகிய பிரதேசங்களில் காட்டு யானைகள் காணக் கூடியதாக உள்ளதுடன், இரந்தெனிகலை சரணாலயம் மற்றும் உடதும்பர, மீமுரே ஆகிய பிரதேசங்களில் அநேகமான நேரங்களில் காட்டு யானைகள் நடமாடுகின்றன. இப்பிரதேசங்களில் பெரிய அளவில் படர்ந்திருக்கும் அடர்ந்த காட்டுக்குள் சிறுத்தைகளும் வாழ்வதுடன் கம்பொல, ஹந்தான, பாத்தஹேவாஹட்டை போன்ற பிரதேசங்களிலும் சிறுத்தைகள் தொடர்பாக இடைக்கிடையே அறியக்கிடைக்கின்றது. மாவட்டத்தின் எல்லா பிரதேசங்களிலும் காடுகளை ஒத்தியதாக குரங்கு, மந்தி மற்றும் காட்டு பன்றிகள் வசிப்பதுடன், இரந்தெனிகலை சரணாலயத்தை ஒத்திய பகுதியில் புள்ளி மான்கள் ,மறைகள் மற்றும் மணல் மான்கள் போன்ற பல வகையான வனவிலங்குகளை காணக்கூடியதாக உள்ளது. இதை தவிர கவனிக்கத்தக்க பறவை இனங்களும் இப்பிரதேசத்தை ஒத்தி வாழ்கின்றன.

வாழ்க்கை முறை

கண்டி மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 1,499,168 ஆவதுடன், அதில் நகரபுற, கிராமப் புற மற்றும் தோட்டத்துறை ஆகிய மூன்று துறையையும் பிரதி நிதித்துவப்படுத்தும் சனத்தொகை அமைப்பொன்றையும் காணக்கூடியதாக உள்ளது. மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 185,893 (12%) நகர புறப் பிரிவாகவும் 1,219,952 (81%) கிராம புறத்தாராகவும், 93,323 (7%) தோட்டத்துறையையும் பிரதி நிதித்துவப்படுத்துகிறனர்.

பொதுவாக எடுத்துகொண்டால் கண்டி மாவட்டத்திற்குள் விவசாய பொருளாதார முறையொன்றை காணமுடியும். காணி உபயோகிக்கும் முறையினை நோக்குகையில் பயிரிட்டுள்ள வயல் நில அளவு ஹெக்டயார் 35,628 ஆகும். அவ்வாறே தேயிலை, தென்னை, இறப்பர், பட்டை மற்றும் ஏனைய பயிர்கள் முறையே 21,283 , 10,911 , 2,255 மற்றும் 12,118 ஹெக்டயார்கள் ஆகும்.

நகர்ப்புறங்களில் அதிக மக்கள் தொகை அடர்த்தியை காணக் கூடியதாக உள்ளதுடன், இது சுமார் 12% ஆகும், மேலும் அவர்கள் கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளின் கீழ் தங்கள் வாழ்வாதார தொழில்களில் ஈடுபடுவதைக் காணலாம். அதற்கமைய இத்துறைகள் ஊடாக மாவட்டத்தின் பொருளாதாரத்திற்கு நகர்ப்புற மக்களின் பங்களிப்பு விசேடமானது.

நீர்ப்பாசன தொகுதி

கண்டி மாவட்டத்தின் நீர்பாசன தொகுதிளைப் பார்க்கும் போது மினிபே வேலைத்திட்டம் , முரபொல எல வேலைத்திட்டம், கம்பொலவெல வேலைத்திட்டம், உடுகொட பண்டார எல வேலைத்திட்டம் பிரதான நீர்பாசன தொகுதிகளாக காணப்படுகின்றன.கண்டி மாவட்டத்திற்குரிய ஒரே ஒரு கமநல குடியேற்றமாக மினிபே வேலைத்திட்டத்தை கூற முடிவதுடன் முதலாம் அக்போ மன்னனின் காலம் வரையிலான வரலாற்றைக் கொண்ட மினிப்பே குடியேற்றமானது மிகப் பெரிய பொக்கிஷமாகும். இக்குடியேற்றமானது 1931ம் ஆண்டு திரு.டி.எஸ்.சேனாநாயக்க அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. மினிபே பிரதேச செயலகத்துக்குரிய இத்திட்டத்தின் நிரூற்று மகாவலி ஆறு ஆகும். இங்கே பிரதான ஓடை மினிபே இடதுபக்க மதில் ஆவதுடன் நீளம் 74 கி.மீ ஆகும். அத்துடன் 1,556 கிளை கால்வாய்களையும் 491 வயல் கால்வாய்களையும் உள்ளடக்கிய மினிப்பே வேலைத்திட்டத்தின் மொத்த அறுவடை 18,595 ஏக்கர் ஆகும். நெற் பயிர் மற்றும் மேலதிக பயிர் செய்கைகளை பயிர் வகைகளாக கூற முடிவதுடன் , பயிர் வகைகளில் 80% நெற் பயிர் செய்கை ஆவதுடன் மிகுதியான 20% மேலதிக பயிர்களாகும். முரபொல எல வேலைத்திட்டம் கண்டி மாவட்டத்தில் தெல்தொட்டை மற்றும் பாத்தஹேவாஹெட்ட ஆகிய 02 பிரதேச செயலகங்களுக்குரியதுடன் பிரதான ஓடையின் நீலம் 15.5 கிலோ மீட்டர் ஆகும். இங்கே பயிர் அறுவடை 1,200 ஏக்கர் ஆவதுடன், நெல் மற்றும் மேலதிக பயிர் செய்கைகளை காணலாம். இவ்வேலைத்திட்டத்தின் கீழ் அனுகூலங்களை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 2,600 ஆகும். பாததும்பர, பன்வில மற்றும் குண்டசலை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குள் நடைபெறும் உடுகொட பண்டார எல திட்டத்தின் நீரூற்றுக்கள் ரவன் ஒய என்றழைக்கப்படுவதுடன், ஓடையின் நீளம் 7.1 கிலோமீட்டர் ஆகும். இங்கே அறுவடை 405 ஏக்கர் ஆவதுடன், நெல் மற்றும் காய்கறிகள் முக்கிய பயிர்கள் ஆகும். உடுகொட பண்டார எல வேலைத்திட்டம் மூலம் சுமார் 1,000 குடும்ங்கள் அனுகூலங்களை பெறுகிறார்கள். உலபனை ஓடை நீரூற்றுக்களை மையமாகக் கொண்டு கம்பொலவெல ரஜ எல வேலைத்திட்டம் கங்க இஹல கோரளை பிரதேச பிரிவிற்குள் அமைந்துள்ளது. இங்கே பிரதான ஓடையின் நீலம் 12.8 கிலோமீட்டர் ஆகும். இங்கே அறுவடை 405 ஏக்கர் ஆவதுடன், அனுகூலங்களை பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள் 1000 ஆகும்.

1.1.2 மாவட்ட செயலகம் பற்றிய அறிமுகம்

மத்திய மாகாணத்தின் பிரதான மாவட்டமாக திகழும் கண்டி மாவட்டமானது 20 பிரதேச செயலகப் பிரிவுகளையும் 22 உள்ளூராட்சி அதிகார பிரதேசங்களையும், 1188 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் கொண்டுள்ளதுடன் கண்டி மாவட்டத்தின் முழு சனத்தொகை 1,499,168 ஆகும். முழு சனத்தொகையில் 74.4% சிங்களவர்கள், 11.2% தமிழர்கள் 13.9% முஸ்லிம்களும் (சோனகர்கள்) மற்றும் 0.5% மான ஏனைய இனங்களையும் கொண்டுள்ளது.

இடைக்கிடையே பல வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளான போதிலும், மலை நாட்டு இராஜதாணி சுயானதீனமாக இருந்த போதிலும், 1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதி கையொப்பமிட்ட " உடரட்ட கிவிசும" (மலைநாட்டு ஒப்பந்தம்) உடன் அதன் சுயாதீன நிலையும் சிதைவடைந்து முழு இலங்கையும் பிரித்தானியரின் கிரீடத்தின் காலணித்துவ நாடானது. அதன் பிரதிபலனாக மலை நாட்டில் இருந்த அரசனை தலைமையாகக் கொண்ட உள்ளாட்டு அரச நிர்வாக அமைப்பு முழுமையாக சிதைந்துடன் பிரிதானியரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்த நிர்வாக முறையொன்று எழுந்தது. அதற்கேற்ப பிரிதானிய ஆட்சி காலத்தில் மத்திய மாகாணத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராக கண்டி கச்சேரியின் அரச அதிபர் செயற்பட்டார். சரித்திர தகவல்களின் பிரகாரம் கண்டி கச்சேரி கி.பி. 1825 ல் கண்டி அரச மாளிகையை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கண்டியின் முதலாம் அரச அதிபராக வெள்ளை இனத்தை சேர்ந்த திரு. ஜோர்ஜ் டர்னர் அவர்கள் 1825-1837 வரை காலத்தில் பதவி வகித்துள்ளார்.

கண்டி அரச மாளிகையை மையமாக் கொண்டு நடாத்திச் சென்ற கண்டி கச்சேரி 1868 இல் ஸ்ரீ தலதா மாளிகையின் பத்திருப்புக்கு எடுத்து சென்றுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வேளையில் கண்டி ஆட்சி காலத்தின் அரச அதிபராக கடமை புரிந்தவர் வெள்ளை இனத்தவரான திரு. பீ. டப்ல்யூ. பேப்ரூக் அவர்கள்.

பிற்காலத்தில் பல்வேறு காரணங்களினால் கண்டி கச்சேரியானது கண்டி தபால் கட்டிடத்திற்கு தற்காலிகமாக எடுத்து சென்றுள்ளனர். பின்னர் 1880ல் ஸ்ரீ தலதா மாளிகைக்கு அருகில் நிர்மாணித்த கட்டிடத்திற்கு (பிற்காலத்தில் நீதி மன்ற கட்டிடம்) எடுத்துச் சென்றுள்ளதுடன், அவ்வேளையில் அரச அதிபராக வெள்ளையரான. திரு. எஸ். பீ. டெம்ப்லர் செயலாற்றி உள்ளார். அன்று முதல் சுமார் 80 வருடங்கள் தொடர்ச்சியாக அவ்விடத்தில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1957 ஆம் ஆண்டில் கண்டி கச்சேரியானது தற்போது கண்டி யட்டிநுவர வீதியில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு எடுத்து சென்றுள்ளதுடன், அச்சந்தர்ப்பத்தில் அரச அதிபராக கடமையாற்றியவர் திரு. ஏ. பீ. எஸ். என். புள்ளையார் அவர்கள் ஆவார்.

1946 ம் ஆண்டு முதல் இலங்கை சிவில் சேவை உத்தியோகத்தர்கள் அரச அதிபர்களாக பணிபுரிந்துள்ளனர். பல்வேறு அரச நிறுவனங்களில் சேவையாற்றிய அனுபவம் கொண்ட இலங்கை

நிருவாக சேவையின் விசேட தரத்தின் சிரேஷ்ட அதிகாரியான திரு. டி.எம்.என்.ஜி.ஜி திஸ்ஸ கருணாரத்ன அவர்கள் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ம் திகதி முதல் 2020 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை கண்டி அரச அதிபராக பாரிய சேவையொன்றை நிறைவேற்றியதுடன், தற்போதைய மாவட்ட அரசாங்க அதிபரான திரு.சந்தன தென்னகோன் அவர்கள் பல்வேறு அரச நிறுவனங்களில் சேவையாற்றிய அனுபவங்களுடன் 2020 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தற்போது வரை விசேட பங்கினை ஆற்றி வருகிறார்.

மாவட்ட செயலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய 25 பிரிவுகள் மாவட்ட செயலக வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், கங்கவட்ட கோரளை பிரதேச செயலகம், அரச கணக்காய்வு அலுவலகம், பௌத்த விவகார திணைக்களம் மற்றும் தேர்தல் திணைக்களம் என்பன இந்தக் கட்டிட தொகுதியில் நிறுவப்பட்டுள்ளன.

1.2 நோக்கு, பெறுமானங்கள் ,செயற்பணி

நோக்கு

கண்டி மாவட்ட செயலகத்தை

இலங்கையில் மிகச் சிறந்த நிர்வாக ஸ்தாபனமாக்குதல்

பெறுமானங்கள்

- ஒழுக்கத்துடன் கூடிய பண்பான சேவை.
- சிரேஷ்ட பிரஜைகளிடம் அக்கறை காட்டுதல் மற்றும் கௌரவித்தல்
- அங்கவீனர்களுக்கு முன்னுரிமை
- குழு உணர்வோடு செயற்படுத்தல்
- சுற்றாடலுக்கு உகந்த அலுவலக சூழல்
- அறிவு மேலாண்மை மையமாக செயல்படுதல்
- அதிஉயர் வாடிக்கையாளர் உபசரிப்பினூடாக சேவை பெறுபவர்களை திருப்திப்படுத்தல்.

செயற்பணி

அரச கொள்கைகளுக்கு ஏற்ப மாவட்டத்திற்கே

உரித்தான பெருமை மிக்க மரபுகளைப்

பாதுகாத்து கண்டி மாவட்டத்தை

நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்லுதல்.

1.2.1 தரக் கொள்கை

தரக் கொள்கை

“ISO 9001; 2008 சர்வதேச சேவைத்

தரங்களுக்கு ஏற்ப

இடைவிடாமல் முன்னேற்றத்தை நோக்கும்

முறைசார் நிர்வாகத் தொகுதியினூடாக சேவை

பெறுபவர்களுக்கு

உயரிய நுகர்வோர் திருப்தியைப்

பெற்றுக்கொடுத்தல்”.

1.3மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் பிரதான அலுவல்கள்

- பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு, மேற்பார்வை மற்றும் உத்தியோகத்தர்களின் நிறுவனப் பணிகள். (உத்தியோகத்தர்களின் பதவியில் நிரந்தரமாக்கல், தடை பரீட்சைகளை நடாத்தல், பதவி உயர்வு/ பதவி கால நீடிப்பு மற்றும் உத்தியோகத்தர்களின் வேதனக் கடன் முற்பணம் பெற்றுக்கொடுத்தல் போன்ற அலுவலக வசதிகளை ஒழுங்குசெய்தல்).

- மாவட்டத்திற்குள் அமைந்துள்ள 1188 பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்களுக்கான அலுவலக கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களின் மனத் திருப்தியை ஏற்படுத்தல்.

- ஸ்ரீ தலதா மாளிகை தலைமையான மல்வத்து , அஸ்கிரி மஹா விஹாரை மற்றும் ஏனைய பௌத்த வணக்கத் ஸ்தலங்களின் அலுவல்கள், ஸ்ரீ தலதா பெரஹர (தெருவிழா) ஒழுங்குபடுத்தல் அலுவல்கள், மாவட்ட சமயப் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவல்கள் உட்பட பௌத்த சமய அலுவல்கள்.

- இந்து, இஸ்லாம், கத்தோலிக (கிருஸ்தவ) மற்றும் ஏனைய சமயங்கள் தொடர்பான விடயங்கள்.

- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட விவசாயக் குழு, மாவட்ட வீட்டுக்குழு, மாவட்ட சுற்றாடல் சட்டங்களை செயற்படுத்தும் குழு, மாவட்ட பாதுகாப்பு/ இடர் (அனர்த்த) முகாமைத்துவக் குழு மற்றும் மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியக் குழுக்களை நடாத்துவதன் மூலம் மாவட்ட செயலாளரின் தலைமைத்துவத்தில் நடாத்த வேண்டிய அனைத்துக் கூட்டங்களையும் ஒழுங்கு செய்து ஏனைய அரச அலுவலகங்களை ஒருங்கிணைத்தல்.

- பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கை மற்றும் நீர், மின்சாரம் உட்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன் மாவட்ட முதலீட்டு திட்டத்தினை செயற்படுத்தல்.

- கண்டி நகர் மற்றும் மாவட்டத்தை, விஷேடமாக கவனத்தில் கொண்டு ஒப்படைக்கப்படும் தேசிய அளவிலான விழாக்கள் மற்றும் பல்வேறு அரச விழாக்களை ஏற்பாடு செய்து நடாத்துதல்

- தேர்தல் திணைக்களத்துடன் ஒருங்கிணைத்து மாவட்டத்தில் தேர்தல் அலுவல்களை நடாத்துவித்தல்

- புதிய அரச உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் அரச உத்தியோகத்தர்களின் திறமைகள் மற்றும் தேர்ச்சியினை மேன்மைபடுத்துவதற்காக காலத்தின் தேவைக்கமைய பயிற்சி வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் நடாத்துதல்.

- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நியதிச் சட்டமுறை மற்றும் அபிவிருத்தி ரீதியான அலுவல்களை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றல் மற்றும் நல்ல நிதி நிர்வாகத்தினை ஏற்படுத்தலுக்காக அலுவலக மேற்பார்வை முறையொன்றை ஏற்படுத்தி அதனை வருடம் முழுவதும் உள்ளக கணக்காய்வு குழுவினால் பரிசோதனை செய்து திருத்தங்களை ஏற்படுத்தி உரிய வழி காட்டல்களை வழங்குதல்.

- பொது மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்தல், வளங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் திட்டமிடல் அலுவல்களை நிறைவேற்றல்.

- மாவட்ட சமூர்த்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்.

- மாவட்ட செயலாளர்/ அரசங்க அதிபரின் மேற்பார்வையில் உள்ள சிறுதொழில் அபிவிருத்தி பிரிவு, நுகர்வோர் அதிகாரச்சபை, அளவை அலகு தரப்படுத்தல் மற்றும் சேவைகள் பிரிவு, சமூக பாதுகாப்புப் பிரிவு, மாவட்ட ஊடகப் பிரிவு, புள்ளி விபரப்பிரிவு, மோட்டார் வாகன போக்குவரத்து, கலாச்சார மற்றும் பௌத்த அலுவல்கள், அனர்த்த முகாமைத்துவ அலுவல்கள், மாவட்ட காணி உபயோகத் திட்டமிடல் பிரிவு, தேசிய நீர்வாழ் (உயிரின) விவசாய பரவலாக்கல் பிரிவு, சமூக சேவை பிரிவு, உற்பத்தி திறன் பிரிவு, மனித வள மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு, குழந்தை மற்றும் மகளிர் நடவடிக்கை, விளையாட்டு பிரிவு விவசாய மற்றும் சமுர்திப் பிரிவு ஆகிய பிரிவுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

- பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார்கள், மனுக்கள், குறைகள், கோரிக்கைகள் போன்றவற்றிக்கான சம்பந்தப்பட்ட தகவலை உரிய துறைகளிடம் இருந்து பெற்று அதற்கான தீர்வுகளை வழங்குவதுடன், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக நிர்வாகத்தில் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக பெறப்படும் மனுக்கள், புகார்கள் குறித்து பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்துவதன் மூலம் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தல்.

- கண்டி மாவட்டத்திற்குள் பலா, ஈரப்பலா மரங்களை வெட்டி சாய்ப்பதற்கான மூன்றுக்கு (03) மேற்பட்ட 15 க்கு குறைவான சந்தர்பங்களில் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், அனுமதி வழங்குதல் மற்றும் மரங்களின் எண்ணிக்கை 15 க்கு அதிகமாயின் விவசாய அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரையை பெற்றுக்கொடுத்தல்.

- கண்டி மாவட்டத்திற்குள், வெடிவைக்கும் ஆயுதங்களுக்கான அனுமதி பத்திரங்களை வழங்குதல், வருடாந்த வெடிபொருட்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

- மாவட்ட செயலக கட்டிடத்தொகுதியில் உள்ள அலுவலகங்களுக்கு நீர், மின்சார மற்றும் உள்ளக தொலைப்பேசி வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான அடிப்படை வசதிகளை வழங்குதல்.


- மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்தினூடாக மேற்பார்வையிடப்படும் அலுவலகங்களின் நிறுவன பணிகளை மேற்கொள்ளல்.

- கண்டி மாவட்டத்தில் நிகழும் இயற்கை அனர்தங்களின் போது பாதிப்படையும் மக்களுக்கு துரிதமாக வசதிகளை செய்து கொடுப்பதற்கு தேவையான விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவதுடன் நீண்ட கால தீர்வுகள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் உரிய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- மாவட்டத்தின் விவசாய அபிவிருத்திக்கு தேவையான அலுவல்களை ஒருங்கிணைப்பத்துடன் அரசினால் பொது மக்களுக்கு சலுகைகள் வழங்குதல்களை துரிதமாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு தேவையான ஒருங்கிணைப்பு பணிகளைச் செய்தல் .

- மாவட்ட நிர்வாகத்தின் விடயப் பரப்பிற்குள் கண்டி நகரம் மற்றும் கண்டி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட விசேட பணிகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றிற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

1.4 ஒழுங்கமைப்பு அட்டவணை



1.5.1 மாவட்ட செயலகத்தின் முக்கிய பிரிவுகள்

1. தாபனப் பிரிவு	18. புள்ளி விபரப் பிரிவு
2. கணிப் பிரிவு	19. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒழுங்மைப்பு அலகு
3. பொறியியலாளர் பிரிவு	20. மத அலுவல்கள் / மொழி ஒருங்கிணைப்புப் பிரிவு
4. உள்ளக கணக்காய்வுப் பிரிவு	21. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு
5. திட்டமிடல் பிரிவு	22. கலாசாரப் பிரிவு
6. அபிவிருத்திப் பிரிவு	23. உற்பத்தித் திறன் பிரிவு
7. கணக்குப் பிரிவு	24. மோட்டார் வாகனப் பிரிவு
8. சமூர்த்திப் பிரிவு	25. மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் பிரிவு
9. சிறு கைத்தொழில் பிரிவு	26. வெடிபொருட்கள் பிரிவு
10. நுகர்வோர் நடவடிக்கைப் பிரிவு	27. விளையாட்டுப் பிரிவு
11. நீர்வாழ் பயிர் செய்கை அபிவிருத்தி பிரிவு	28. மாவட்ட விவசாயப் பிரிவு
12. மாவட்ட காணி உபயோகிப்புத் திட்டமிடல் பிரிவு	29. பொலிஸ் ஆணைக்குழு
13. மாவட்ட ஊடகப் பிரிவு	30. தேர்தல் பிரிவு
14. மனித வள அபிவிருத்திப் பிரிவு	31. முயற்சியான்மை அபிவிருத்தி அலகு
15 அளவை அலகு தரம் மற்றும் சேவை பிரிவு	32. இணக்க சபை அலகு
16. சமூகப் பாதுகாப்புப் பிரிவு	33. அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு
17. சமூக சேவைகள் பிரிவு (வயோதிபர்/உளவள ஆலோசனை)	

1.5.2 பிரதேச செயலகங்கள்

தொ .இ .	பிரதேச செயலகம்	தொ .இ .	பிரதேச செயலகம்
1	கங்கவட்டக்கோரளை	11	மெததும்பர
2	குண்டசாலை	12	உடதும்பர
3	பாத்ததும்பரை	13	மினிப்பே
4	பன்வில	14	அக்குரணை
5	யட்டிநுவர	15	பூஜாப்பிட்டிய
6	உடுநுவர	16	ஹாரிஸ்பத்துவ
7	உடபலாத்தை	17	தும்பனை
8	தொழுவ	18	ஹத்தரலியத்த
9	பாத்தஹேவாஹட்டை	19	கங்க இஹல கோரளை
10	தெல்தொட்டை	20	பஸ்பாகே கோரளை

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1. விசேட நிகழ்வுகள்





பிரித் ஓதுதல் மற்றும் 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப நிகழ்வு .






26.01.2022 அன்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு.சமல் ராஜபக்ஷ தலைமையில் தெல்தோட்டை பிரதேச செயலக கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.





26.01.2022 அன்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு.சமல் ராஜபக்ஷ தலைமையில் உடதும்பர பிரதேச செயலக கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.





2022 கண்டி எசல பெரஹெர





கண்டி மாவட்ட செயலகத்தில் 20.12.2022 அன்று பெண்கள் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சர் திருமதி கீதா குமாரசிங்க அவர்களின் பங்குபற்றுதலுடன் முன்பிராய சிறுவர் மற்றும் இளைஞர்களின் போஷாக்கு தொடர்பில் கண்டி மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி.





25.12.2022 அன்று திரு.திலும் அமுனுகம அவர்கள் தலைமையில் இடம்பெற்ற அனர்த்த முகாமைத்துவ கூட்டம்.





29.10.2022 அன்று கௌரவ பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களின் தலைமையில் இடம்பெற்ற உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காக கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி மையங்களை மேம்படுத்துவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறைக்கான நிகழ்ச்சித் திட்டம்



தெல்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டத்தை இணைக்கும் பயோயா பாலம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு உதயண கிரிந்திகொட அவர்களின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.



குண்டசாலை ஹதபிம அதிகாரசபையின் பயிர்கள் விற்பனை நிலையம் கௌரவ விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.



தோட்ட மக்களிடையே நிலவும் சமூக பிரச்சனைகளை தீர்க்க திருமணமாகாத தோட்ட மக்களுக்கு திருமணம் செய்து வைக்கும் விழா - யட்டிநுவர பிரதேச செயலகம்



கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு அனுராத லங்கா ஜயரத்ன அவர்களின் தலைமையில் காணி உறுதிப்பத்திரங்கள், அனுமதிப் பத்திரங்கள் மற்றும் கொடுப்பனவு பத்திரங்கள் வழங்குதல். (20/03/2022)



கௌரவ இராஜாங்க அமைச்சர், சட்டத்தரணி திரு அனுராத லங்கா ஜயரத்ன அவர்களின் தலைமையில் "ஜன ஜெய செவன" வீடமைப்பு திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. - குருகெலே ராஜமாலே (2022/03/04)



புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட அரச சேவை பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு அனுராத லங்கா ஜயரத்ன தலைமையில் இடம்பெற்றது. (2022.01.15)



திரு.ஆனந்த ஜெயவிலால் தலைமையில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை திறந்து வைத்தல்.



பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு.திலக் ராஜபக்ஷ அவர்கள் , கௌரவ திலும் அமுனுகமவின் ஒருங்கிணைப்பு செயலாளர், ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் தலைவர் ஆனந்த ஜெயவிலால் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் பங்குபற்றலில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல்.



கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.உதயன கிரிந்திகொட மற்றும் பாதஹேவாஹெட்ட பிரதேச சபையின் தலைவர் அவர்களின் பங்குபற்றலுடன் தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவில் கலஹா மொறகொல்ல பிரதான வீதியின் புதிய பாலத்தினை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுதல்.



கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.குணதிலக ராஜபக்ஷ அவர்கள் தலைமையில் அகுரண பிகா ஓய அபிவிருத்தி திட்டம்.



மாகாண ஆளுநர் திரு.லலித் யு.கமகே தலைமையில் ரஜவெல்லை இளநிலை கல்லூரியின் புதிய மூன்று மாடிக் கட்டிடத்தின் திறப்பு விழா.



கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்/ கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் திரு.குணதிலக ராஜபக்ஷ அவர்கள் தலைமையில் "லக்ஷில்ப கைவினைப் பொருட்கள்" விற்பனை கூட திறப்பு விழா .



பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவினால் மாவீகும்புர சமூக பண்ணை திறப்பு விழா.



வரவு செலவு திட்டத்தின் ஒரு லட்சம் வேலைத் திட்டத்தின் கீழ் தடுபெதிருப்ப கிராம உத்தியோகத்தர் பிரிவின் காரியாலய அடிக்கல் நாட்டுதல்.



கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.குணதிலக ராஜபக்ஷ அவர்களின் பங்கேற்புடன் வெலிகல்ல பிரதேசத்தில் சௌபாக்யா காளான் உற்பத்தி கிராமத்தை திறந்து வைத்தல்.



கௌரவ பிரதேச சபை உறுப்பினர் அவர்களால் புளியந்த ,எதுல்கம தெற்கு பிரிவில் மூடப்பட்டுள்ள பாடசாலையின் கட்டிடத்தை புனரமைத்து சிறிய ஆடைத்தொழிற்சாலையொன்றை ஆரம்பித்தல்.



பாததும்பர பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கௌரவ திரு.லோஹான் ரத்வத்த தலைமையில் நடைபெற்ற "கம சமக பிலிசதர" அங்குரார்ப்பண நிகழ்வு.



கௌரவ சுகாதார அமைச்சர் திரு.கெஹெலிய ரம்புக்வெல்ல அவர்களின் தலைமையில் பயிலுனர்களாக பயிற்றுவிக்கப்பட்ட 45 பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்குதல்.



கௌரவ வெளிவிவகார அமைச்சர் திரு. ஜி.எல்.பீரிஸ் மற்றும் கௌரவ சுகாதார அமைச்சர் திரு.கெஹலிய ரம்புக்வெல்ல அவர்களின் தலைமையில் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கல்.



திட்டம் - இஹலவெல சேவை நிலைய கட்டுமானம்.
ஒதுக்கீட்டு தொகை - ரூ.30 லட்சம்
குண்டசாலை பிரதேச செயலக பிரிவு



திட்டம் - மெனிக்ஹின்ன மெதகம்மெத்த உடகும்புர வயல்வெளி ஊடாக விவசாய வீதி அபிவிருத்தி
ஒதுக்கீட்டு தொகை - ரூ.10 லட்சம்
குண்டசாலை பிரதேச செயலக பிரிவு



திட்டம் - "கம சமக பிளிசதர " கிராம இணைப்புத் திட்டத்தின் கீழ் கெடகஹல பிரிவின் நுகசெவனயிலிருந்து அகுன்கும்புர வயல் வீதி வரையிலான புறவழிச் சாலை அபிவிருத்தி.
ஒதுக்கீட்டு தொகை - ரூ 12 லட்சம்
பாததும்பர பிரதேச செயலக பிரிவு



திட்டத்தின் பெயர் - மொரஹேன கிராம சாலை (வரவு செலவு திட்டத்தில் ஒரு லட்சம் பணிகள் - கிராம அபிவிருத்தி 2022)
ஒதுக்கீட்டு தொகை: ரூ. 1,000,000.00
தொலுவ பிரதேச செயலாளர் பிரிவு



திட்டத்தின் பெயர் - கால்நடை வளர்ப்பிற்காக நியமிக்கப்பட்ட நபர்களின் தேவைக்கேற்ப விலங்குகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.
ஒதுக்கீட்டு தொகை - ரூ.300,000.00
மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவு



திட்டத்தின் பெயர் - துனுவில ஏரி மறுசீரமைப்பு
ஒதுக்கீட்டு தொகை - மாகாண சபை/ மத்திய அரசு (வரவு செலவு திட்டத்தில் ஒரு லட்சம் பணிகள்) - ரூ.7.9 மில்லியன் , அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவு



திட்டத்தின் பெயர் - சிறு ஆடைத் தொழில்கள்
ஒதுக்கீட்டு தொகை - ரூ.12,445,000.00
பாதஹேவஹட்ட பிரதேச செயலாளர் பிரிவு



திட்டத்தின் பெயர் - பத்தேகமவில் இருந்து எகொடகம ஊடாக விகாரை வரை செல்லும் வீதி அபிவிருத்தி.
ஒதுக்கீட்டு தொகை ரூ - 1,200,000.00
பன்வில பிரதேச செயலாளர் பிரிவு



திட்டத்தின் பெயர் - அலங்கார மலர் தோட்டம்
ஒதுக்கீட்டு தொகை - ரூ. 7,207,000.00
பாதஹேவஹட்ட பிரதேச செயலாளர் பிரிவு

2022 இல் நிகழ்ந்த அனர்த்தங்கள்





காட்டு யானைகளால் பிரதேசத்தில் ஏற்பட்ட பயிர் சேதம் மற்றும் உயிர்/உடமை இழப்பு.



கடும் மழை காரணமாக மெதவல கொபலவத்த பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலை. - ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலக பிரிவு



கனமழை காரணமாக முல்லேகம தெற்கு பிரதேசம், வெலேகடை ரம்புகேவெல பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியது.- பூஜாபிட்டிய பிரதேச செயலக பிரிவு



கனமழை காரணமாக கல்மடுவ வீதி பாதிப்படைந்தமை.- குண்டசாலை பிரதேச செயலக பிரிவு



ஹுன்னஸ்கிரிய பிரதேசத்தை அண்மித்த நக்கிள்ஸ் சரணாலயத்தில் ஏற்பட்ட தீயை, உயிர் அல்லது உடமைச் சேதங்கள் ஏற்படாத வகையில் கட்டுப்படுத்துதல். (2022.07.10) – உடதும்பர பிரதேச செயலக பிரிவு

2.2. வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

கண்டி மாவட்டம் அடைந்த விசேட வெற்றிகள்



தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டி 2020 - பொதுத்துறைப் பிரிவில் பிரதேச செயலகங்களுக்கிடையில் முதல் இடத்தை பெற்றுக் கொண்டமை.- குண்டசாலை பிரதேச செயலகம்



2020 ம் ஆண்டின் தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் தகமை சான்றிதலுக்கான பாராட்டு விருதைப் பெற்றமை. (விருது வழங்கல் 2022 ம் ஆண்டு) – பூஜாபிட்டிய பிரதேச செயலகம்



துபாயில் நடைபெற்ற ஆசிய கிண்ண பாரம் தூக்குதல் போட்டியில் பங்கேற்ற அணி.



2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 2020 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுகளில் பாததும்பர பிரதேச செயலகம் சிறப்பு தகமை சான்றிதலுக்கான பாராட்டு விருதினைப் பெற்றது.



அகில இலங்கை பாரம் தூக்குதல் போட்டியில் கலந்து கொண்ட அணி



துபாயில் நடைபெற்ற ஆசிய பாரம் தூக்குதல் போட்டியில் ரன்சிலு ஜயதிலக்க ஆசிய சாம்பியன் பட்டம் வென்றார்.



சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச பாரம் தூக்குதல் போட்டியில் வெற்றி வாகை சூடிய உஷான் சாருக விதான பதிரன



அகில இலங்கை பாரம் தூக்குதல் போட்டியில் (முதுநிலை) முதலாம் இடத்தைப் பெற்ற எஸ்.கே.எஸ். பிரதீப் (சிறந்த பளுதூக்கும் வீரர்)

சவால்கள்

- அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய பிற நிறுவனங்களுக்கு சொந்தமான நிலத்தின் உரிமை தொடர்பான சட்டங்கள்.
- பணவீக்கத்தினால் உயர்ந்து வரும் மூலப்பொருள் விலைகள் காரணமாக மதிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பதிலும் விற்பனையாளர்களை அடையாளம் காண்பதிலும் சிரமம் காணப்படுதல்.
- பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து , நலத்திட்ட உதவிகளை நாடுவோரின் எண்ணிக்கை அதிகரித்ததுள்ளமை.
- குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய போதிய நீர் ஆதாரங்கள் பிரதேசத்தில் காணப்படாமை மற்றும் ஏற்கனவே உள்ள நீர் ஆதாரங்களை அடைவதில் சிரமம் காணப்படல்.
- வன விலங்குகளால் ஏற்படும் சேதத்தினால் விவசாய பயிர்களின் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி

- ☞ அனர்த்தங்கள் மற்றும் வெள்ளம் ஏற்படுதல்.
- ☞ போதியளவு கிராம உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை.
- ☞ தொலைதூர பிரதேசங்களில் காணப்படுகின்ற தொடர்பாடல் பிரச்சனைகள் மற்றும் தொழிநுட்ப சிக்கல்கள்.
- ☞ இனங்களுக்கிடையே காணப்படும் மரபுகள் மற்றும் உளப்பாங்குகள்..
- ☞ குறைந்த வசதிகளை கொண்ட பிரதேச செயலகங்களில் அலுவலகத்திற்கு வருகைதருதல் , வெளிச்செல்லல் மற்றும் களப்பணிகளில் ஈடுபடுதல் போன்றவற்றில் அதிகாரிகளுக்கு ஏற்படுகின்ற போக்குவரத்து சிரமங்கள்.
- ☞ ஆண்டிண் இறுதியில் திட்டங்களுக்கான அனுமதி வழங்கப்படுவதால், திட்டங்களை செயல்படுத்த போதிய காலம் காணப்படாமல் இருப்பினும் திட்டத்தை செயல்படுத்தி நிறைவேற்றுவதற்கு நிகழுதலும் ஒதுக்கீடுகள் போதுமானதாக காணப்படாமையும்.
- ☞ சில பிரதேச செயலக அலுவலகங்களில் போதிய இடவசதியுடன் கூடிய அலுவலக கட்டிடம் இல்லாததால் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்கள்.
- ☞ பல்வேறுபட்ட இனக்குழுக்கள் வசிக்கும் பிரதேசத்தின் தொடர்பாடலில் மொழிப் பிரச்சனைகள் தோன்றுதல்.
- ☞ உயர்வான மலைப்பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் காணப்படும் சிரமங்கள்.

எதிர்கால இலக்குகள்

- இதுவரைஅனுமதிப் பத்திரம்/சலுகைப் பத்திரம் பெறாத அரசு நிலங்களில் வசிக்கும் அனைத்து நபர்களுக்கும் சட்டப்பூர்வ உரிமைகளை வழங்குதல்.
- பொதுமக்களுக்கு அசௌகரியமின்றி சேவைகளை வழங்கும் பொருட்டு அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் " நிலசெவன" உத்தியோகபூர்வ காரியாலயங்களை நிர்மாணித்தல்.
- அனைவருக்கும் குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- பொருளாதார சவால்களுக்கு மத்தியில் பிராந்தியத்தில் உணவு பாதுகாப்பை உறுதி செய்தல்.
- கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துதல்.
- சாலை வசதிகளை அபிவிருத்தி செய்வதனூடாக பிரதேசத்தின் போக்குவரத்து வசதிகளை சிறந்த நிலைக்கு கொண்டு வருதல்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் பிரதேசத்தில் தகவல் தொழில்நுட்ப அறிவை விரிவுபடுத்துதல்.
- பிரதேசத்தின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாத்து மேம்படுத்துதல்.
- வேலையற்ற இளைஞர்களை புதிய முதலீடுகளுக்கு ஊக்குவித்தல்.
- விவசாயிகளின் உணவுப் பயிர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2025 ஆம் ஆண்டுக்குள் அனைத்து விவசாயக் குடும்பங்களையும் மேலதிக பயிர் சாகுபடிக்கு வழிநடத்துதல்.
- வரலாற்று சிறப்புமிக்க இடங்களுடன் கூடிய சுற்றுலா நகரங்களையும் அவற்றுடன் தொடர்புடைய வேலை வாய்ப்புக்களையும் உருவாக்குதல் .
- ஆக்கிரமிப்பு செடிகளை அகற்றுதல் மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளில் மரங்கள் நாட்டும் திட்டங்களை செயல்படுத்துதல்.
- ஒவ்வொரு குழந்தைக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- தோட்ட தொழிலார் சமூகத்தினரின் கழிவறை சுத்திகரிப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் மனப்பாங்குகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
- குடும்ப வன்முறை மற்றும் சிறுவர் பாதுகாப்பு குறித்து விழிப்புடன் செயல்படல்
- பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளின் உள்ளார்ந்த திறன்களை மேம்படுத்துதல்.
- "உத்தம பூஜா" 15000 கர்ப்பிணி தாய்மார்களுக்கு போஷாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல்.
- குறைந்த வருமானம் கொண்ட100 சிறுவர்களுக்கு வளர்ப்புப் பராமரிப்பு கல்விக் கொடுப்பனவை வழங்குதல்.

- ஆபத்துக்குரிய 40 சிறுவர்கள்களுக்கு மருத்துவ, ஊட்டச்சத்து, இரட்டைப் பிறப்பு போன்றவற்றிக்கான உதவித் தொகைகளை வழங்குதல்.
- சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெற்றிகரமான தொழில்முனைவோரை அங்கீகரிப்பதற்காக மாவட்ட மகளிர் தின நிகழ்வை நடத்துதல்.
- பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கு பானை கைத்தொழிலை மேம்படுத்தல், வீட்டில் பயிற்சிப் புத்தகங்களை தயாரித்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் பெண்களை நம்நாட்டில் வலுப்படுத்தல்.
- 70 வயதுக்கு மேற்பட்ட 25834 மூத்த குடிமக்களுக்கு வாழ்வாதார கொடுப்பனவை வழங்குதல்.
- 100 வயதுக்கு மேற்பட்ட 37 மூத்த குடிமக்களுக்கு வாழ்வாதார கொடுப்பனவை வழங்குதல்.
- 60 வயதுக்கு மேற்பட்ட 2500 பேருக்கு வயது முதிர்ந்தோர் அடையாள அட்டைகளை வழங்குதல்.
- 27 பயனாளிகளுக்கு தேனீக்கள் பராமரிப்பு திட்டத்தை ஆரம்பித்தல்.
- 12 பயனாளிகளுக்கு காளான் வளர்ப்பு பயிர்ச்செய்கை திட்டத்தை ஆரம்பித்தல்.
- 250 முன்பள்ளி குழந்தைகளை "பாதுகாப்பு" முன்மொழிவு திட்டத்தில் பங்கு பெறச்செய்தல்.
- வெளிநாடு செல்லும் 300 நபர்களை "மனுசவிய" ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளல்.
- முழு சமூகத்திற்குமான தேசிய நிலப் பயன்பாட்டு ஆய்வு வரைபடத்தை தயாரித்தல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு மண் மற்றும் நீர் பாதுகாப்பு மூலம் பயன்படுத்தப்படாத விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- முழு சமூகத்திற்கும், பிரதேச செயலக மட்டத்தில் நீர் ஆதாரங்களை அடையாளம் கண்டு வரைபடமாக்கல்.

மேற்குறித்த தகவல்கள் சரியானது என சான்றளிக்கின்றேன்.

சந்தன தென்னகோன்

அரச அதிபர்/ மாவட்ட செயலாளர் கண்டி மற்றும்

மேலதிக செயலாளர்

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் ,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

3. அத்தியாயம்

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

எசீஎ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		5,689,259,000	7,469,405,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		503,972,403	726,873,826	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		88,621,685	81,131,151	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		6,281,853,088	8,277,409,977	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		6,281,853,088	8,277,409,977	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	2,500,000	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		6,281,853,088	8,274,909,977	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-		
1,519,985,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	1,465,434,446	1,326,502,716	
146,265,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	134,942,401	134,395,825	ஏசீஏ-2(ii)
12,750,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	8,595,903	458,704,719	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-		
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-		
1,679,000,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		1,608,972,750	1,919,603,260	
	மூலதனம் செலவினம்				
20,400,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	18,470,951	13,112,015	
6,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	5,948,643	113,695,902	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
600,000	திறன் விருத்தி	14	297,511	199,683	
744,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	715,907,396		
771,000,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		740,621,501	127,007,600	
	வைப்புக் கொடுப்பனவுகள்		736,029,047	738,563,600	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		78,984,103	74,810,160	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-		
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		815,013,150	813,373,760	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		3,164,607,401	2,859,984,620	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		3,117,245,687	5,414,925,357	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		3,117,245,687	5,414,925,357	ஏசீஏ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

3.2 நிதி நிலை அறிக்கை

மாவட்டச் செயலகம், கண்டி
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

	குறிப்பு	உண்மை நிலை	
		2022	2021
		ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	6,872,234,386	6,662,699,891
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	201,024,234	209,910,129
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**7,073,258,620**	**6,872,610,020**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		48,620,251	(174,550,499)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		6,872,234,386	6,662,699,891
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	152,403,983	384,460,628
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**7,073,258,620**	**6,872,610,020**

பக்க இலக்கம் 1 முதல் 51 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 52 முதல் 59 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பெயர்:	பெயர்: சந்தன தென்னகோன்	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி : 2023.02.20	பதவி : மாவட்ட செயலாளர்	பெயர் : ஜே. எம். எஸ். பண்டார
திகதி	திகதி : 2023.02.15	திகதி : 2023.02.15
Mr. Bandara Kapuhinne Secretary Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils & Local Government Home Affairs Division	Chandana Tennakoon District Secretary / Government Agent Kandy & Additional Secretary State Ministry of Home Affairs	J. M. S. Bandara Chief Accountant District Secretariat Kandy

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	444,588,916	314,599,099
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	5,689,259,000	7,469,405,000
முற்பணங்களை அறவிடல்	131,124,877	126,997,544
வைப்புக்களின் பெறுகை	503,972,403	726,873,826
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	6,768,945,196	8,637,875,469
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	1,616,425,589	1,473,982,389
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	8,595,903	458,704,719
வருமானத்திலிருந்து பணத்தைத் திரும்பப் பெறுதல்	9,238,899	95,101,710
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	3,159,279,206	3,964,344,180
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	2,500,000
முற்பணக் கொடுப்பனவு	118,773,150	110,573,811
வைப்புக் கொடுப்பனவு	736,029,047	738,563,600
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	5,648,341,794	6,843,770,409
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**1,120,603,402**	**1,794,105,060**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	1,120,603,402	1,794,105,060
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	1,120,603,402	1,794,105,060
